மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம்!

ரூ. 3300 கோடி நிதியை விடுவிக்க ஒன்றிய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை!

அமைச்சர் இ.பெரியசாமி அறிக்கை!

சென்னை, பிப்.26-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ .3300 கோடி நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டுமென்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ. பெரியசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் இ.பெரியசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள 37 மாவட்டங்களில், 388 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப்பகுதிகளில் உடல் உழைப்பு சார்ந்த வேலை வழங்க முன்னரும் மக்களுக்கு வேலை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 85.19 லட்சம் குடும்பங்களுக்கு வேலை அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 1கோடியே 9லட்சம் தனிநபர்களுக்கு வேலை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2024-25 ஆம் ஆண்டில் 20 கோடி மனித சக்தி நாட்கள் வேலை வழங்க ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்ட நிலையில் இதுவரை 28.45 கோடி மனித சக்தி நாட்கள் பணி வழங்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட வேலை நாட்களுக்கு இது 142 சதவீத சாதனையாகும். பணிகளை மேற்கொள்ளும் மொத்த பணியாளர்களில் பெண்கள் 86 சதவீதமாகவும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 27 சதவீதமாகவும் பழங்குடியினர்கள் பங்களிப்பு 1.63 சதவீதமாகவும் உள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் அதிக பயனடைபவர்கள் பெண்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும்

பழங்குடியினராக உள்ளனர். மக்கள் தொகை அடிப்படையில் இவ்வகுப்பினரின் பங்களிப்பு அதிக அளவில் உள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் 1.10 லட்சம் மாற்றுத்திறனாளிகளும் பயனடைந்துள்ளனர்.

எனவே, இத்திட்டம் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு இத்திட்டம் பெரும்பங்களிப்பை வழங்கி வருகிறது. ஆனால் சமீப காலமாக ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கான நிதி

விடுவிப்பதில் தாமதம் செய்வதால் இத்திட்டப் பணியாளர்களுக்கு குறித்த காலத்தில் ஊதியம் வழங்குவது காலதாமதம் ஏற்படுகிறது தற்போதைய நிலையில் இத்திட்ட பணி யாளர்களுக்கான ஊதிய நிலுவை 2400 கோடியாகவும், திட்டத்தின் கீழ் கட்டப்படும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதி களுக்கான பொருட்கூறு நிலுவை 852 கோடியாகவும் உள்ளது.

நிலுவையிலுள்ள திட்ட நிதியை விடுவிக்ககோரி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரதப்பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். மேலும் தமிழ்நாடு நிதியமைச்சர் அவர்கள் ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து நிலுவையிலுள்ள நிதியை விரைவில் விடுவிக்க கோரிக்கை விடுத்துள்ளார். நிதி பெறப்பட்டதும் பணியாளர்களின் நிலுவை ஊதியம் அவர்களின் வங்கிக்கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் இ. பெரியாசமி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சி.மகேஷ்குமார் தலைமை!

கொளத்தூர் தொகுதியில் மனிதநேய உதயநாள் - மாபெரும் மருத்துவ முகாம்!

மருத்துவர் ப்ரீத்தா ரெட்டி தொடங்கி வைத்தார்! ஐ.சி.எப்.வ.முரளிதரன் – எ.நாகராசன் பங்கேற்பு

சென்னை, பிப். 26 -

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் சி.மகேஷ்குமார்- தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக கொளத்தூர் தொகுதி சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாமை -மேலாண்மை இயக்குநர் அப்போலோ மருத்துவமனை, மருத்துவர் ப்ரீத்தா ரெட்டி துவக்கி வைத்தார்.

கொளத்தூர் தொகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 3, திராவிடம் சமூக மருத்துவம்! சீராக்கும் முதல்வர் திருக்கரம்! எனும் தலைப்பில்மாபெரும் மருத்துவ முகாம் 25.2.2025 ஜி.கே.எம். காலனி, பட்டுமேடு நாடார் ஐக்கிய சங்கத்தில் நடைபெற்றது.

இம்மாபெரும் மருத்துவ முகாமை, தலைமை செயற்குழு உறுப்பினர் சி.மகேஷ்குமார் தலைமை வகிக்க, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைஅமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் அப்போலோ மருத்துவமனையை சார்ந்த பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற குறிப்பாக பொது மருத்துவர்கள், கண் மருத்துவர்கள், இதய நோய் நிபுணர்கள், எலும்பியல் நிபுணர்கள், பல் மருத்துவர்கள், மகப்பேறு மருத்துவர்கள், இ.சி.ஜி, எக்கோ, மமோகிராம் நிபுணர்கள் என 20க்கும் மேற்பட்ட மருத்துவர்களும் அவர்களுக்கு உதவியாக 30 செவிலியர்களும் மருத்துவ உதவியாளர்கள் 10 நபர்கள் என அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற மருத்துவ முகாமை அப்போலோ மருத்துவமனை மேலாண்மை இயக்குனர் டாக்டர் ப்ரீத்தா ரெட்டிஅவர்கள் துவக்கி வைத்து மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்தவர்களுக்கு இலவசமாக அவர்களின் நோய் தீர்க்கும் மருந்துகளும், ஊட்டச்சத்து பொருட்களும், பழங்களும் வழங்கி சிறப்பித்தார்.

சிறப்புமிக்க மருத்துவ முகாமில் பயனடைந்த நோயாளிகள் மொத்தம் 556 நபர்கள். எக்கோ எடுத்தவர்கள் 28 நபர்கள், இசிசி எடுத்து ஆலோசனை பெற்றவர்கள் 122 நபர்கள் எக்ஸ்ரே எடுத்தவர்கள் 22 நபர்கள் மே மோகிராம் எடுத்தவர்கள் 14 நபர்கள், பல் மருத்துவம் பார்த்துக் கொண்டவர்கள் 92 நபர்களும், கண் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றவர்கள் 120 நபர்கள் அதில் 60 நபர்களுக்கு கண்ணாடி இலவசமாக வழங்க உள்ளார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் ஏ.நாகராசன், ஐ.சி.எப்.வ. முரளிதரன் மற்றும் சே.சந்துரு, தேவஜவகர், சரிதாம கேஷ்குமார், டாக்டர். சாந்த குமாரி, தாவுத் பீ, சாரதா, திருமதி.யோகபிரியா, திருமதி.ஸ்ரீதணி, திருமதி. அமுதா, கொளத்தூர் கிழக்கு/ மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, என். பொன்முடி, ஜே.ஜார்ஜ்குமார், கே.பி.ஆதவன் மணி, பி.டி.சி. எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ். முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி நன்றி கூறினார்.

மதுரை மாவட்டம்

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல் குறித்து ஆலோசனைக்கூட்டம்!

இயக்குநர் எம்.ஏ.சித்திக், தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, முன்னிலையில் நடைபெற்றது!

மதுரை.பிப்.26-

மதுரை மாவட்டம், கோர்ட்யார்ட் பி மாரியாட் ஹோட்டலில் நேற்று (25.02.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, முன்னிலையில் மதுரை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்துதல் குறித்து, தொடர்புடைய அலுவலர்கள் ஆகியோருடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

மதுரை நகரத்தில் மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report - DPR) ரூ.11,368 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் ஒப்புதல் பெற்ற பின்பு திட்டப் பணிகள் தொடங்கப்படும். இந்நிலையில், மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துதல் குறித்து, தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் முன்னனி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனான ஆலோசனைக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. மதுரை மெட்ரோ இரயில் திட்டத்தின் திட்டச் செயலாக்க நேரத்தைக் கணிசமாகக் குறைக்கும் வகையில், நிலத்திட்ட அட்டவணையை முன்கூட்டியே தயாரித்தல், பயன்பாட்டு அடையாளம் காணல், பயன்பாட்டு இடமாற்றம் மற்றும் பங்குதாரர் அங்கீகாரங்களைப் பெறுதல் இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

கோயம்புத்தூர் மெட்ரோ மற்றும் மதுரை மெட்ரோ திட்டங்களின் விரிவான திட்ட அறிக்கை முறையே ரூ.10,740 கோடி மற்றும் ரூ.11,368 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த முன்மொழிவுகளாக மத்திய அரசின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் தற்போது பரிசீலனையில் உள்ளது. மதுரை நகரம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மையான நகரமாகும். நகரில் உள்ள பழமையான அடையாளங்கள் பாதிக்கப்படாத வகையில் மதுரை மெட்ரோ இரயில் திட்டம், 26.5 கி.மீ. நீளத்திற்கு 23 உயர் நிலை நிலையங்களுடனும், 5.5 கி.மீ. நீளத்திற்கு 3 சுரங்கப்பாதை நிலையங்களுடனும் அமைக்கப்படவுள்ளது.

இந்த மெட்ரோ இரயில் திட்டச் செயலாக்கத்தின் போது நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துவது, நிலம் கையகப்படுத்துதலைக் குறைத்தல் மற்றும் செயல்பாட்டின் போது பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தீர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. மெட்ரோ வழித்தடத்திற்காக சுமார் 38.21 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்படும், இதில் 20.23 ஹெக்டேர் நிலம் பணிமனை கட்டுமானத்திற்குத் தேவைப்படும். மதுரை மெட்ரோ இரயில் திட்டம் மதுரையில் நகர்ப்புற போக்குவரத்தை கணிசமாக மேம்படுத்தும் என்றும், பொது போக்குவரத்தை மிகவும் திறமையானதாகவும், அணுகக்கூடியதாகவும் மாற்றும் என்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், தலைமைப் பொது மேலாளர்கள் திருமதி.ரேகா பிரகாஷ் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), டி.லிவிங்ஸ்டன் எலியேசர் (திட்டம் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி. சித்ரா விஜயன், , மாவட்ட வருவாய் அலுவலர் என்.ராகவேந்திரன், உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி.வைஷ்ணவி பால், , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி. மோனிகா ராணா, , மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஏ.எம்.வி. பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. – க.தனசேகரன் – கே.கண்ணன் பங்கேற்பு!

கலைஞர் நகர் தெற்குப் பகுதி 136-வது வட்ட நிர்வாகிகள் கூட்டம்!

வட்டச் செயலாளர் பூக்கடை ஆர்.பழனிசாமி வேண்டுகோள்!

சென்னை, பிப்.26-

கலைஞர் நகர் தெற்குப் பகுதி - 136-வது வட்டச் செயலாளர் பூக்கடை ஆர். பழனிசாமி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் வரும் 28-02-2025 வெள்ளிக் கிழமை மாலை, கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நமது மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில், தோழமை கட்சி தலைவர்கள் நம் தலைவரை வாழ்த்தவும், தலைவர் தளபதி அவர்கள் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

அது சம்பந்தமான ஆலோசனை கூட்டம் அவைத்தலைவர் எம். பால்ச்சாமி தலைமையில் இன்று (26.02.2025 புதன்கிழமை) மாலை 6.00 மணி அளவில், வட்ட அலுவலகம் 104வது தெரு, 14வது செக்டார், கலைஞர் நகர், இராணி அண்ணா நகர், 12 வது பிளாக் அருகில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் விருகை சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மாநகராட்சி கணக்கு நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.

கூட்டத்தில் வட்டத்துக்கு உட்பட்ட பகுதி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட , பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், வட்ட கிளை நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள் சம்மந்தப்பட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 136-வது வட்ட செயலாளர் பூக்கடை ஆர்.பழனிசாமி கேட்டுக்கொள்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி

44(அ) வட்டச் செயலாளர் ஆர்.எஸ். மனோகரன் மறைவு!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அஞ்சலி!

சென்னை, பிப்.26

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 44(அ) வட்ட கழக செயலாளராக பணியாற்றி வந்த ஆர்.எஸ். மனோகரன் (வயது 67) அவர்கள் உடல்நலக்குறைவால் 25.2.2025 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். செய்தி அறிந்தவுடன் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அஞ்சலி செலுத்தி இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தா.இளைய அருணா, ந.மனோகரன், பொறியாளர் அணி துணை செயலாளர் இரா. நரேந்திரன், பகுதி செயலாளர்கள் க. ஜெயராமன், அ.முருகன், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், பொதுக் குழு உறுப்பினர் க.அமுல், மாமன்ற உறுப்பினர்கள் சர்ப ஜெயாதாஸ், ஏ.ஆர். ஆர். மலைச்சாமி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் நா.சேகர், வட்ட செயலாளர்கள் க.பாபு, த. ஆறுமுகம், ஜி.மாரிமுத்து, கி.தினகரன், வி.முருகன், கே.வி.இராஜன், நீ.கார்த்தீபன், மு.உமாபதி, இரா. அரிதாஸ், கே.ஈ. செந்தமிழரசு, சி.எஸ்.இரவி, பகுதி நிர்வாகிகள் மு. சாகல்ஹமீது, வி.வேதா, இரா. ஜோதி, வி.எஸ்.பிரபு, அ.ஜியா மற்றும் கழக நிர்வாகிகள் மறைந்த ஆர். எஸ்.மனோகரன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
26.02.2025 புதன்கிழமை	காலை 9.00 மணி	வேலூர்	எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர்

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-02-2025

தமிழ்நாடு மாணவர்களின் கூட்டமைப்பு சார்பில் மும்மொழி கொள்கை என்ற பெயரில் தமிழ்நாட்டில் இந்தியை திணித்து திணிக்கும் பாசிச பாஜக அரசை கண்டித்து திருத்தணி கமலா திரையரங்கம் பி.எஸ்.என்.எல் அலுவலகம் வரை திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முரளி சேனா தலைமையில் பேரணையாக சென்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதில் மாவட்ட மாணவர் துணை அமைப்பாளர்கள் எம். எம். லிங்கேஷ்குமார், கு பிரபாகரன், மு.எழிலரசன்,ம. கோபிநாத், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளன.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் வழக்கறிஞர் அணி தகவல் தொழில் நுட்ப அணி சுற்றுச்சூழல் அணி மீனவர் அணி பொறியாளர் அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் மீஞ்சூர் அடுத்த வல்லூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மிக சிறப்பாக கொண்டாடுவது குறித்து மற்றும் கழக வளர்ச்சி பணிகளை குறித்து ஆலோசனை வழங்கினர் இதில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் கொள்கை பரப்புதுணை செயலாளர் வெ. அன்புவாணன், ஊத்துக்கோட்டை பேரூர் கழக செயலாளர் அபிராமி குமரவேல் , மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.கோபி, மு.பாஸ்கர், ரமேஷ், எம்.ஆறுமுகம், ரோஸ் பொன்னையா முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து. தமிழரசன் உள்படமாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்